மரியே வாழ்க!

"உறுப்பினர்களைப் புனிதப்படுத்துவதன் வாயிலாகக் கடவுளை மகிமைப்படுத்துவதே சேனையின் நோக்கம்"

மரியாவின் மனப்பான்மை

- ஆழ்ந்த தாழ்ச்சி
- குறையற்றக் கீழ்ப்படிதல்
- வானவருக்குரிய இனிமை
- இடையறாத செபப்பற்று
- நீடித்த ஒறுத்தல்
- வீரம் பொருந்திய பொறுமை
- தெய்வீக ஞானம்
- தன்னலம் துறந்த தியாகம்
- நிறைந்த இறையன்பு
- ஈடு இணையற்ற விசுவாசம்
- பழுதற்றக்கற்பு

சேனைக்கு உயிர் நாடியான புண்ணியங்கள்

- விசுவாசம்
- மரியா பேரில் அன்பு
- அஞ்சாமை
- தன்னல மறுப்பு
- சகோதர அன்பு
- செப மனப்பான்மை
- விவேகம்
- பொறுமை
- கீழ்ப்படிதல்
- தாழ்ச்சி
- பணிவு
- திருத்தூது
- ஆர்வம்
- விடாதே பிடி

அன்னை மரியாவின் பெருவிழாக்கள்

ஜனவரி 01	புனித மரியா இறைவனின் தாய்
ஜனவரி 08	புனித விரைந்து உதவும் அன்னை
பெப்ரவரி 02	ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்
பெப்ரவரி 11	லூர்து நகர்ப் புனித கன்னி மரியா
மார்ச் 25	கிறித்துவின் பிறப்பு அறிவிப்புப் பெருவிழா
மே 13	பாத்திமா நகர்ப் புனித கன்னி மரியா
மே 31	புனித கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்தல்
ஜூன் 27	புனித இடைவிடா சகாய அன்னை
ஜூலை 16	புனித கார்மல் அன்னை
ஆகஸ்ட் 15	புனித கன்னி மரியாவின் விண்ணேற்புப் பெருவிழா
ஆகஸ்ட் 22	புனித மரியன்னை விண்ணக, மண்ணக அரசியாக முடிசூடுதல்
செப்டம்பர் 08	புனித கன்னி மரியாவின் பிறப்பு விழா
செப்டம்பர் 12	புனித கன்னி மரியாவின் தூய்மைமிகுப் பெயர்
செப்டம்பர் 15	புனித கன்னி மரியாவின் துயரங்கள்
அக்டோபர் 07	புனித செபமாலை அன்னை விழா
நவம்பர் 21	புனித கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்
டிசம்பர் 08	புனித கன்னி மரியாவின் அமலோற்பவம்
டிசம்பர் 12	குவாதலுப் நகர்ப் புனித கன்னி மரியா

மரியாயின் சேனை செபங்கள்

1. சேனை ஆரம்பச் செபம்

முதல் தந்தை, மகன் தூய ஆவியின் பெயராலே – ஆமென்

தூய ஆவியே எழுந்தருளி வாரும். உம்முடைய விசுவாசிகளுடைய இதயங்களை நிரப்பும். அவைகளில் அன்பின் நெருப்பை மூட்டியருளும். ஆண்டவரே, உமது ஆவியை அனுப்பியருளும். அவரால் அவை படைக்கப்படும்.

துணை : அதனால் உலகின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

செபிப்போமாக : தந்தையாம் இறைவா, உமது தூயஆவியின் கொடைகளை உலகின்மேல் பொழிந்தருளும். நற்செய்தியைப் போதிக்கத் துவங்கிய காலத்தில் உமது திருஅவையின்மேல் உமது ஆவியைப் பொழிந்தீரே, இக்காலத்தில் அதே ஆவியானவர் விசுவசிக்கும் அனைத்து உள்ளங்களின் மூலமாகச் செயல்பட வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக மன்றாடுகிறோம். ஆமென்.

மு : ஆண்டவரே நீர் என் இதழ்களைத் திறந்தருளும்.

து : என் நா உம்மைப் புகழக் கடவது.

மு : இறைவா, நீர் எனக்கு உதவியாக வாரும்.

து : ஆண்டவரே, நீர் எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும்.

மு : தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும்...

து : தொடக்கத்தில் இருந்ததுபோல...

(அதன்பின் ஜெபமாலையின் ஐந்து பத்துக்கள், சொல்ல வேண்டும்)

அனைவரும் : வாழ்க அரசியே / தயைமிகு அன்னையே வாழ்க / இனிமையே தஞ்சமே வாழ்க / தாயகம் இழந்த ஏவையின் மக்கள் தாயே என்றுனைக் கூவி அழைத்தோம். கண்ணீர்க் கணவாய் நின்றுனை நோக்கிக் கதறியே அழுதோம். பெருமூச்செறிந்தோம். ஆதலால் எமக்காய்ப் பரிந்துரைப்பவளே! அன்புடன் எம்மைக் கடைக்கண் பாராய். உம் திருவயிற்றின் கனியாம் இயேசுவை / இம்மை வாழ்வின் இறுதியில் காட்டுவாய். கருணையின் உருவே / தாய்மையின் கனிவே / இனிமைத் தருவே / கன்னி மரியே. ஆமென்.

மு : இயேசுகிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி ஆகுவதற்காக.

து : இறைவனின் தூய அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

செபிப்போமாக : ஓ இறைவா, உமது ஒரே குமாரனின் வாழ்வினாலும் மரணத்தாலும் உயிர்ப்பினாலும் நித்திய இரட்சண்ய பேறு பலன்களை எங்களுக்குப் பெற்றுத் தந்தருளினீரே. தூய கன்னிமரியாவின் தூய ஜெபமாலையில் அடங்கியுள்ள இப்பரம இரகசியங்களைத் தியானித்து அவைகளில் உள்ளவைகளை நாங்கள் கண்டு பாவிக்கவும் அவைகள் வாக்களிப்பதை நாங்கள் அடையவும் தயை செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக உம்மைப் பார்த்து மன்றாடுகிறோம். ஆமென்.

மு : இயேசுவின் மிகவும் தூய இருதயமே

து : எங்கள் மேல் இரக்கமாயிரும்.

மு : மரியாயின் மாசற்ற இருதயமே

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு : தூய யோசேப்பே

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு : நற்செய்தியாளரான தூய யோவானே.

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு : தூய லூயி மரி தே மோன் போர்த்தே.

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு : தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே – ஆமென்.

2. சேனையின் சங்கிலி செபம்

(இது கூட்ட நிகழ்ச்சிகளின் நடுவில் சொல்ல வேண்டிய செபம். ஒவ்வொரு சேனையாளரும் நாள்தோறும் இதைச் சொல்லவேண்டும்)

எல்லோரும் : "வைகறை போல் தோற்றம்; திங்களைப் போல் அழகு; ஞாயிறு போல் ஒளி; போர் அணி போல் வியப்பார்வம்; யார் இவள்?"

மு : ஆண்டவரை எனது உள்ளம் + போற்றிப் பெருமைப்படுத்துகின்றது.

து : என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது.

மு : ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்.

து : ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்.

மு : அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.

து : அவர் தம் தோள் வமையைக் காட்டியுள்ளார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப் போரைச் சிதறடித்து வருகிறார்.

மு : வயோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.

து : பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பி விடுகிறார்.

மு : மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர் தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்.

து : தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்.

மு : தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

து : தொடக்கத்தில் இருந்ததுபோல் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எல் : "வைகறை போல் தோற்றம்; திங்களைப் போல் அழகு; ஞாயிறு போல் ஒளி; போரணி போல் வியப்பார்வம்; யார் இவள்?"

மு : ஜென்மப் பாவமின்றி உற்பவித்த மரியாயே.

து : உம்மை நாடிவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

செபிப்போமாக: எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, தந்தையிடம் எங்களுக்காகப் பரிந்து பேசுபவரே, உமது தாயாகிய மிகவும் பரிசுத்த கன்னிகையை எங்களுக்கும் தாயாகவும் உம்மிடம் எங்களுக்காகப் பரிந்து பேசுபவராகவும் நியமிக்கத் திருவுளமானீரே, உம்முடைய வரங்களைத் தேடி உம்மை நாடி வருபவர்கள் அனைவரும் அவள் மூலமாய் அவற்றைப் பெற்று மகிழுமாறு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

3. சேனை இறுதி செபம்

(இது கூட்டத்தின் முடிவில் சொல்லவேண்டிய செபம்)

தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே – ஆமென்

கடவுளின் தூய அன்னையே! இதோ உம்மிடம் அடைக்கலம் தேடி வருகிறோம். எங்கள் தேவைகளில் நாங்கள் உமக்கு ஒப்புக்கொடுக்கும் மன்றாட்டுக்களைப் புறக்கணியாதேயும்; மாட்சிமை பொருந்திய ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையே! எல்லா ஆபத்துக்களினின்றும் எப்பொழுதும் எங்களைப் பாதுகாத்தருளும்.

மு : எல்லா அருள்வரங்களின் மத்தியஸ்தியாகிய அமலோற்பவமரியே.

(அல்லது பிரிசிடியத்தின் பெயரைக் கன்னித்தாயின் பெயரோடு இணைத்துச் சொல்லவும்)

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு : தூய மிக்கேலே, தூய கபிரியேலே,

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

மு : வானுலக வல்லமைகள் அனைத்துமே, மரியாயின் வானதூதர்களின் சேனையே.

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

மு : தூய திருமுழுக்கு யோவானே.

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு : பேதுரு, பவுல் என்னும் புனிதர்களே.

து : எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

(கீழ்க்கண்ட செபத்தைத் துவக்கம் முதல் ஆமென் வரை எல்லோரும் சேர்ந்து சொல்லவேண்டும். அதன்பிறகு உள்ள பகுதியைக் குரு மட்டும் சொல்லுவார்)

செபிப்போமாக : எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, மரியன்னையின் கொடியின்கீழ் போர் புரியும் எங்களுக்கு உம்மீது குறைவற்ற விசுவாசத்தையும் / உமது அன்னையின் மீது நிறை நம்பிக்கையும் தந்து உலகத்தை வெல்லுமாறு வல்லமை அளித்தருளும். எங்கள் செயல்கள் அனைத்தையும் / உம் மீதுள்ள அன்பிற்காக மட்டும் செய்யவும் / எங்கள் அயலாரில் உம்மையே கண்டு உமக்கே பணிபுரியவும் / இறைஅன்பால் ஊக்கம் பெற்ற உயிருள்ள விசுவாசத்தைத் தந்தருளும். வாழ்க்கையில் நேரிடும் சிலுவைகளிலும் வருத்தங்களிலும் / ஏமாற்றங்களிலும் நாங்கள் மனந்தளராமல் அமைதியாயிருக்க கற்பாறை போன்ற உறுதியான அசைக்க முடியாத விசுவாசத்தைத் தந்தருளும். கடவுளுக்காகவும் ஆன்மாக்களின் மீட்புக்காகவும் / பெருங்காரியங்களைத் தயக்கமின்றித் தொடங்கவும் / தொடர்ந்து செய்யவும் / துணிவுள்ள விசுவாசத்தை எங்களுக்குத் தந்தருளும் / நாங்கள் ஒற்றுமையுடன் முன்னேறிச் செல்லவும் இறைஅன்பின் நெருப்பை எங்கும் எரியச் செய்யவும் / இருளிலும் சாவின் நிழலும் இருப்பவர்களுக்கு ஞானஒளி தரவும்; ஆர்வமற்றவர்களுக்கு ஊக்கம் ஊட்டவும் / பாவத்தால் ஆன்ம உயிர் இழந்தவர்களுக்கு மீண்டும் உயிர் கொடுக்கவும் / சமாதானத்தின் வழியில் நாங்களே அடிசறுக்காமல் நடந்து செல்லவும் / எங்களுக்கு நெருப்புத்தூண்போல் / துணை புரியும் விசுவாசத்தைத் தந்தருளும். இவ்வாறு வாழ்க்கை என்னும் போராட்டம் முடிவடைந்த பிறகு எங்கள் சேனை முழுவதும் / அதன் உறுப்பினர் ஒருவரையும் இழக்காமல் உமது அன்பும் மாட்சியும் விளங்கும் / நித்திய பேரின்ப நாட்டில் உமது முன்னிலையில் மீண்டும் அணிவகுத்து நிற்க அருள்புரிந்தருளும் ஆண்டவரே. ஆமென்.

(பிறகு குரு தம் ஆசீர் வழங்குகிறார். குரு இல்லையெனில் "தந்தை, மகன் தூய ஆவியின் பெயராலே ஆமென்" சொல்லவும்.)

பொன் விழா ஆண்டு விழா மலர்

மரியாயின் சேனை -

நிக்கிய சகாய மாதா க்யூரியா

தாய இகய ஆண்டவர் ஆலயம்

அரக்கோணம்

இவர்கள் (மரியாயின் சேனையர்) யாராக இருப்பார்கள், இந்த மரியாயின் குடிமக்கள்?

இவர்கள் இறைவனின் ஊழியர்களாக இருப்பார்கள். இவர்கள் கொடுத்து வைத்த எழியும் தீ சுவாலை போன்று உலகமெங்கும் கிறிஸ்து அன்பை எரிய செய்வார்கள். இவர்கள் மரியாளின் ~~[illegible]~~ வலிமைப் பொருந்திய கரங்களில் இருந்து கூரிய அம்புகளைப் போல் பாய்ந்து இறைவனின் எதிரிகளின் உள்ளத்தை ஊடுருவி அவர்களை உருமாற்றுவார்கள்

- புனித லூயி மரி தே மோன் போர்த்

"மரியாயின் சேனை" ஏதோ ஒரு திருச்சபையில் இயங்கும் ஒரு இயக்கமோ அல்லது விசுவாசிகளால் ஒன்று சேர்ந்து நடத்தப்படும் ஒரு இயக்கமோ மட்டும் அல்ல அது ஒரு தீர்க்கதரிசனம். ஆம், புனித லூயி மரி தே மோன் போர்த் அவர்களால் 1710ல் அதாவது 18ம் நூற்றாண்டிலேயே மரியன்னையின் காலையில் ~~[illegible]~~ பல ஆன்மாக்கள் ஒன்று திரண்டு உலகமெங்கே சேனை ஒன்று உருவாகும் என்று தீர்க்கதரிசனமாக முன்னறிக்கப்பட்டது தான் "மரியாயின் சேனை". திருச்சபையின் வரலாற்றில் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் நாள் இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற தொடங்கியது என்று தான் அயர்லாந்து நாட்டில் டப்லின் நகரத்தில் மைரா (Myra) இல்லம் என்ற கட்டிடத்தில் இரவு 8.00 மணிக்கு 15 உறுப்பினர்களை கொண்ட ஒரு கருத்தினரால் "மரியாயின் சேனை" துவங்கப்பட்டது இதை நிறுவியவர் இறை ஊழியர் ஃபிராங்க். டியூஃப் அவர்கள். இப்படாறு துவங்கப்பட்ட

மரியாயின் சேனையின் முதல் பிரசீடியம் இரக்கத்தின் மாதா பிரசீடியம் என்ற பெயரில் செயல்பட ஆரம்பித்தது. இது உலகெங்கும் பரவ மரியன்னை ஆசீர்வதித்தார்.

இந்தியாவில் முதன் முதலாக 1931 பிப்ரவரி 2 ஆம் நாள் சென்னை தேனாம்பேட்டை சிறுமலர் இல்லத்தில் (T.C.M Convent) வெற்றியின் மாதா என்ற மரியாயின் சேனை பிரசீடியம் துவக்கப்பட்டது. 1932ல் இது செனாக்குலஸ் (Senatus) என்ற நிர்வாக சபையாக உயர்த்தப்பட்டது.

நமது வேலூர் மறைமாவட்டத்தை பொறுத்த வரையில், சென்னை - உயர் மறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த நிலையில் வேலூர் பங்கில் 1940 ஆம் ஆண்டு மரியாயின் சேனை பிரசீடியம் ஒன்று உருவாக்கப் பட்டது அது சென்னையின் மரியாயின் மாநில நிர்வாக சபையுடன் இணைக்கப்பட்டது. தொடர்ந்து சேனை வளர்ச்சியடைந்த நிலையில் வேலூர் பிரசீடியம் க்யூரியாவாக உயர்த்தப்பட்டது. இந்நிலையில் 1952ல் சென்னை - உயர் மறை மாவட்டத்திலிருந்து வேலூர் மறை மாவட்டம் பிரிக்கப்பட்டு மேதகு ஆயர் மரிய செல்வம் ஆண்டகை அவர்கள் கணமையில் செயல்பட துவங்கியது. இவ்வாறு பல்வேறு இறைப்பணியாளர்களின் பொதுநிலையினரால் வளர்ச்சியடைந்த வேலூர் க்யூரியா 1977 ஆம் ஆண்டு மேதகு ஆயர் டீ. அந்தோணி முத்து ஆண்டகை அவர்களின் ஆசியுடனும் அப்போதைய வேலூர் பங்கு தந்தையாக இருந்த அருட்பணி எம். ஆரோக்யசாமி அவர்களின் ஒத்துழைப்புடனும் சென்னை சினாத்துஸ் அனுமதியுடன் 1977 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 24 ஆம் தேதி கொடியேற்றியமாக (மறைமாவட்ட நிர்வாக சபை) உயர்த்தப்பட்டது.

அருக்கோணம் மறைக்கோட்டத்தில் மரியாயின் சேனை :

நமது அருக்கோணம் மறைக்கோட்டத்தை பொறுத்த வரையில் 1974 ஆம் ஆண்டு வேலூர் மறைமாவட்டத்தின் அப்போதைய பக்த சபைகளின் இயக்குனர் அருட்பணி D. மரிய ஜோசப் அவர்களால் "செபமாலை மாதா மிஷீடியம்" மரியாயின் சேனை துவங்கப்பட்டது. அப்போது இருந்த தூய இதய ஆண்டவர் ஆலயத்தின் பங்கு தந்தை அருட்பணி. காமஸ் ஜார்ஜ் அவர்களின் பெருமுயற்சியால் 7 நவம் உறுப்பினர்களை கொண்ட ஒரு குழுவாக "செபமாலை மாதா மிஷீடிய மரியாயின் சேனை" தொடங்கது, இவ்வாறு தொடங்கப்பட்ட மரியாயின் சேனை பிற்கு சற்று வளர்ச்சி பெற்று செபமாலை மாதா ஆண்கள் மிஷீடியம், செபமாலை மாதா பெண்கள் மிஷீடியம் என்று இரண்டாக துவங்கியது செபமாலை மாதா பெண்கள் மிஷீடியத்தின் தலைவியாக சகோதரி. மரிய பிரகாசி ஆண்கள் மிஷீடியத்தின் தலைவராக சகோதரர். மரிய சூசை முறையே மறைக்கோட்டத்தின் ஆன்ம இயக்குனர் அருட்பணி காமஸ் ஜார்ஜ் அவர்கள் முன்னிலையில் பொறுப்பேற்றனர். அவரே இவர்களை தொடர்ந்து சகோதரர். அடைக்கலராஜ் சகோதரி. சூசை மேரிராஜ்கண்ணி சகோதரர். ஆகியோர் முறையே செயலாளராகவும், துணைத் தலைவியாகவும், பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களை தொடர்ந்து அருக்கோணம் மரியாயின் சேனையில் புது புது மிஷீடியங்கள் துவங்க ஆரம்பித்தது. இவர்களது [illegible] சகோதரர். [illegible] அருட்பணி அவர்கள் மேலான ஆயர் அவர்களின் அனுமதியுடன், 1978 ஆம் ஆண்டு அருக்கோணம், வந்தவாசி ஆகிய பங்குகளில் செயல்பட்ட மிஷீடியங்கள் க்யூரியாக்களாக உயர்த்தப்பட்டன. அருக்கோணம் தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் இயங்கி வந்த மரியாயின் சேனை "நித்திய சகாய மாதா க்யூரியா" என்று புதுப்பொலிவுடன் புனித துவங்கியது க்யூரியாவின் முதல் ஆன்ம இயக்குனராக அருட்பணி. அலோசியஸ் பெர்னாண்டஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

நித்திய சகாய மாதா க்யூரியின் கீழ் 3 மிஷினரியங்கள் இயங்கின. அருட்பணி. அலோசியஸ் பெர்னாண்டஸ் (1975-1987) அவர்களை தொடர்ந்து க்யூரியாவின் ஆண்ம இயக்குனர்களாக இருந்தவர்கள் பேருருட்பணி. V.C. கோஸ் (1987-1988), பேருருட்பணி. M. ஆரோக்யசாமி (1988-1989), பேருருட்பணி. K.K. கோஸ் (1989-1998), பேருருட்பணி. D. ஜான் துரை (1998-2005), பேருருட்பணி. M. ஜான் நிக்கோலஸ் (2005-2006), பேருருட்பணி. S. டேனியல் (2006-2013) ஆகிய அருட்தந்தை அவர்களின் காலக் கட்டத்தில் தான் நித்திய சகாய மாதா க்யூரியின் புதிய உதவியாக சகோதரர். C.T. அந்தோணி அவர்களும் துணைத் உதவியாக சகோதரி. மரிய போஸ்கோ அவர்களும் தேர்வு செய்யப்பட்டனர். பேருருட்பணி. டேனியல் அடிகளாரை தொடர்ந்து பேருருட்பணி. S. அருளப்பன் (2013-2020), பேருருட்பணி. Y. அந்தோணி ராஜ் (2020-2021), பேருருட்பணி. S.M. அமலதாஸ் (2021-தற்போது...). 2023 ஆம் ஆண்டு மார்ச் 12 ம் தேதி நித்திய சகாய மாதா க்யூரியா மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வேளாங்கண்ணி மாதா மேல் நிலை பள்ளி வளாகத்தில் கொண்டுவரப்பட்டது. கொண்டுவரப்பட்ட ஆண்ம இயக்குனர் மற்றும் பக்த சபைகளின் இயக்குனர் பேருருட்பணி. ஜெயபிரகாசம் அடிகளார் அவர்களின் ஒப்புதலுடன் கொண்டுவரப்பட்டது. தலைவி. சகோதரி. இருதயமேரி அவர்களின் அனுமதியின் படி ~~புதிய க்யூரியாவின் அலுவலகங்களை~~ க்யூரியாவின் ஆண்ம இயக்குனர் பேருருட்பணி. S.M. அமலதாஸ் அடிகளாரின் முன்னிலையில் சகோதரர். கா. வெரிண்டோ பெர்னாண்டோ உதவியாகவும், சகோதரி. பரிமளா ஜோதி துணைத்துணைவியாகவும், சகோதரி. மரி செல்வராணியாகவும், சகோதரி. ஜாய்ஸ் பெருமாளாகவும் பொறுப்பேற்றனர். இருக்க முடியாத அலுவல்களின் காரணமாக சகோதரர். மரி அவர்களாலும் சகோதரி. ஜாய்ஸ் அவர்களாலும் பொறுப்பினை கொடுக்க முடியாத காரணத்தால் க்யூரியாவின் ஆண்ம

இயக்குனர் பேரரசப்பன் S.M. ஆனந்தராஜ் அடிகளாரின் ஆலோசனையின் படி மேல்நிர்வாக அலையின் புத்தகுடன் சகோதரி. [redacted] க்யூனியாவின் செயலாளராகவும், சகோதரி. ரூபினா பொருளாளராகவும் 2023 நவம்பர் 11 ஆம் தேதி தேர்வு செய்யப்பட்டனர்.

சேனையின் நோக்கம்:

சுய அர்ச்சிப்பு மற்றும் பிறர் அர்ச்சிப்பு இவற்றை குறிக்கோளாகக் கொண்டு, செபம் சேவை என்னும் கருவிகளை ஆயுதமாக்கி தேவ அன்னையிடம் வெளிப்பட்ட காத்தல், கிழ்ப்படிதல், செயல்நிறை, பரிதல், கற்பு, உரிமை, வானவர்க்கிய இனிமை, இறையன்பு, பொறுமை, நாணம், கன்னலமற்ற ஆழ்ந்த தியானம், விசுவாசம் என்னும் புண்ணியங்களை கடைபிடித்து, இறையருளை பரப்பவும் திருச்சபையின் நான மேய்ப்பர்களுடன் ஒன்றுபட்டு பத்துவைத்து அனை வழுப்படுத்தவும், திருச்சபையின் காயாகிய திருஅவையின் உயிர் நாடியாக செயல்படுவதே மரியாயின் சேனையின் நோக்கம்.

சேனையின் வளர்ச்சி:

[redacted] அருககோணம் மறைக்கோட்டத் மரியாயின் சேனை திறம்பட [redacted] செயல்படுவதற்கு முக்கிய காரணம் [redacted] மறைமாவட்டத்தின் மேதகு ஆயர் தூய்தையர்களின் ஆசீரும், மேல்நிர்வாக அலையாளை கொயிம்பத்தூர் வழிகாட்டுதலும் அத்தோடு அருக்கோணம் க்யூனியாவின் ஆன்ம இயக்குனர்களாக பணியாற்றிய, பணியாற்றுகின்ற அருட்தந்தையர்களின் வழிகாட்டுதலும் என்று சொன்னால் அது மிகையாகாது.

[redacted] [redacted] [redacted] [redacted]
சேனையின் தொடக்கத்தை வளர்ச்சியும், ஆண்மீக பணிகளும் :

* 1980 ஆம் ஆண்டு மரியன்னை தொடக்க அருங்காட்சியகத்தில் பங்கில் அமைத்து சேனையின் ஆன்மீகத்தை வளர்த்தது

* இரண்டு பேருந்துகளில் சேனையர்கள் சென்று மறைமாவட்டத்தில் நடந்த மரியன்னை மாநாட்டில் பங்கேற்றது

* [redacted] மாணவர்களுக்கு மறைக்கல்வி, திருவருட்சாதன வகுப்புகள், விடுமுறை விவிலிய வகுப்புகள் நடத்தியதன் வாயிலாக இறைபணியை வளர்த்தது

* 1980 களில் 3 மிரிசீடியங்களை கொண்டிருந்த நமது க்யூரியா இன்று 10 மிரிசீடியங்களை தொடக்கத்தை கொண்டுள்ளது.

* மேல்பாக்கம் மாதாகி மாதா ஆலயத்தில் 25/03/2023 "மாதாகி மாதா மிரிசீடியம்" துவங்கப்பட்டது

* 29/03/2023 புனித தினம் பங்கில் கிறிஸ்துவர்களின் சகாய மாதா மிரிசீடியம் துவங்கப்பட்டது

* மிரிசீடிய பொறுப்பாளர்களுக்கு அவரவர் கடமைகளை எளிய வகையில் புரிந்து கொள்ளும் விதமாக, கணிக்கணியாக அறிக்கை வடிவில் கொடுத்தது

* ஆண்டு [redacted] இயக்குனர் பேருரை. S.M. ஆரோக்கியராஜ் அடிகளாரின் தலைமையில் சிறப்பு செயலமர்வு நடத்தியது.

* இம் மாதத்திற்கு ஒருமுறை சேனையருக்கு சிறப்பு தியானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* 13/08/2023 சென்னையில் நடைபெற்ற "மரியா நம் பயணத்தின் வழித்துணை" என்னும் மரியன்னை மாநாட்டில் பங்கேற்றது.

* 02/10/2023 அதே நேரத்தில் சேனையர்கள் 5 குருக்களாக பிரிந்து உடல்நலிவுற்றோருக்காக அவர்கள் இல்லம் மற்றும் மருத்துவமனைக்கு சென்று செபித்தனர் உடன் உதவி பணத்தை அருட்பணி. சேகர் அடிகளார் சேனையரோடு திருத்தூது அனுபவம் பகிர்ந்தார்.

* 28/10/2023 "கார்மல் மாதா பிரதிஷ்டையும்" துவங்கப்பட்டது

* 05/12/2023 மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டோருக்காக சிறப்பு செபமாலையை அனைத்து சேனையரும் ஒன்றுகூடி செபித்தனர்

* 13/12/2023 "ஏழாம் மாதா பிரதிஷ்டையும்" துவங்கப்பட்டது.

* 17/12/2023 சேனையர்கள் திருவருகை காலத்திற்கு தங்களை தயாரித்துக்கொள்ள சிறப்பு ஒப்புரவு அருட்சாதனம் வழங்க ஏற்பாடு செய்தது

* 01/01/2024 புதுவருடத்தின் ஆசீர்வாதத்தை க்யூரியாவின் அருள்பணி இயக்குனர் மேருட்பணி. S.M. அமல்தாஸ் சேனையருக்கு வழங்கியதோடு க்யூரியாவின் அலுவலர்களை சந்தித்து சேனையின் வளர்ச்சியை குறித்த சிறுவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

* 09/02/2024" நித்திய சகாய மாதா க்யூனியா
23 ஆங்கிலை சேனையைக் நோக்கு "மெனிலிதா" பயணமாக
ஆக தமிழகத்தின் திருவாவட்டங்களுக்கு சென்று
10 திருத்தலங்களை சந்தித்தனர்.

சேனையின் எதிர்கால திட்டங்கள்:

அன்னை மரியாளின் பக்தியை மறை கோட்பாட்டின்
எல்லா பங்குகளிலும் பரவ செய்து அன்னையின்
புகழ் மணக்கவும், குடும்ப செபமாலை பக்தியை எல்லா
குடும்பங்களிலும் ஆரம்பிக்கவும் மரியாயின் சேனை
திருக்கண்ட வழிகளில் வரும் காலத்தில் முயற்சி செய்யும்.

1- மரியாயின் சேனை இல்லாத பங்குகளில்,
பங்குத் தந்தையின் ஒத்துழைப்போடு மரியாயின் சேனை
துவக்க முயற்சிப்பது

2. சேனையாளர்களின் மூலமாக, பங்கில் உள்ள
குடும்பங்களைச் சந்தித்து, தினமும் குடும்ப செபமாலை
சொல்லும் படிக்கத்தை உருவாக்கவும், குடும்பங்களை
அன்னையின் மாசற்ற இதயத்தின் பாதுகாப்பில் ஒப்புவைக்கவும்
முயற்சிப்பது

3. எல்லா பங்குகளிலும் இளைஞர்களுக்கென
தனிக்கனியாக மரியாயின் சேனை பிரிவிடயங்களை
உருவாக்கி அன்னையின் பக்தியை வளர்ப்பது.

4. இறையழைத்தலின் வேண்டுதலை இளைஞர்கள்
இளம் பெண்கள் மத்தியில் ஏடுத்துக் கூறி, ஒவ்வொரு பங்கிலும்
முக்கியமாக இதுவரை இறையழைத்தல் இல்லாத பங்குகளில்
இறையழைத்தலுக்கு இளைஞர்கள் தம்மையே அர்ப்பணிக்க

ஆர்வத்தையும், காக்கத்தையும் கிளர்ந்தெழச் செய்ய அன்னை மரியாளிடம் சேனையாளர்கள் கொடுத்து வெய்யது

முடிவுரை:

அன்னை மரியாளின் பக்தியை வலுப்படுத்த மரியாயின் சேனையை ஒரு உன்னத கருவியாக உருவாக்கவும், சேனையை பயனுள்ள வகையில் வழிநடத்தி வரும் பக்த சபைகளின் இயக்குனர் தந்தை பேருரை. ஜெயபிரகாசம் அவர்களுக்கும், கொடுத்திய நிர்வாக அமைப்பாளர்களுக்கும், க்யூரியாவின் ஆன்ம இயக்குனர்களாக பணியாற்றிய அனைத்து அருட்தந்தையர்களுக்கும், குறிப்பாக இந்த பொன்விழா ஆண்டிலை சேனையின் நிரந்தர முறையில் நடத்த எங்களுக்கு அறிவுரையும், ஆலோசனை தவறும் தாமதை வழங்கிய க்யூரியாவின் ஆன்ம இயக்குனர் பேருரை. S.M. அருள்தாஸ் அடிகளாருக்கும் இணையணத்தையும் பரிபாலகம் செய்து மறைமாவட்டத்தையும் மறை கோட்டத்தையும் வளர்ச்சி பாதையில் கட்டி செல்லும் எங்கள் பாசத்திற்குரிய மரியாளை புதிய பணி பரிபாலகர் தந்தை பேருரை I. ஜான்பாஸ்ட் அவர்களுக்கும் நிறுத்திய சகாய மாதா க்யூரியா தாய சிலை ஆண்டவர் ஆலய மரியாயின் சேனை கனது இருகரம் கூப்பி இதயம் கனிந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது. சேனையின் எதிர்காலம் சிறப்பாக அமைய இறையருளையும் இறையன்னையின் ஆசீரையும் க்யூரியா வணங்கி கேண்டி நிற்கிறது

மரியே வாழ்க!

இங்ஙனம்

மரியாயின் சேனை, அழகேனம்

மறைக்கோட்டம்

விண்ணகத்தின் படிக்கட்டு மரியாள்

அன்புமிக்க செபமாலை மாதா பக்தர்களுக்கு என் அன்பான வாழ்த்துக்களும் வணக்கங்களும்.

மரியாள் நம் ஆண்டவர் இயேசுவை பெற்று, வளர்த்து நம் மீட்புகாக இவ்வுலகிற்கு கையளித்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம், இதனால் தான் நம் பிதாவாகிய இறைவன் மரியன்னையின் தியாகம், தாழ்ச்சி, செபத்தவ வல்லமை போன்ற புண்ணிங்களுக்கு பரிசாக நமது அன்னையை விண்ணக மண்ணக அரசியாக முடிசூட்டியுள்ளார். தமத்திருத்துவத்தின் ஏக இறைவனால் தான் பெற்ற இந்த மாட்சியை இவ்வுலக மக்களும் பெறவேண்டி நம் தேவ அன்னை நமக்களித்த பெருங் கொடை தான் **"செபமாலை".**

மனித குலம் இறைவனோடு ஒப்புரவு கொண்டு வாழவும், பாவிகள் மனம் திரும்பி பாவ சேற்றில் இருந்து கரை சேரவும், மரியாள் இச்செபமாலையின் வழியாக தன்னையே விண்ணகத்தின் படிக்கட்டுகளாக உருமாற்றி கொண்டுள்ளார். இவ்வுலகிற்கு மரியன்னையின் காட்சிகளும் அவர் கொடுத்த அறிவுரைகளுமே இதற்கு சான்று.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை
சான்றோன் எனக் கேட்ட தாய்"

\- திருவள்ளுவர்

நம்மை பெறாமல் பெற்ற நம் அன்னையும் நம்மிடம் இருந்து எதிர்பார்பதும் இதையே, நம்மை சான்றோர்களாக மாற்றுவது அன்னை மரியாளின் தவம் என்றே நாம் கூற வேண்டும்.

கி.பி. 1208ம் ஆண்டு புனித சாமிநாதருக்கு காட்சியளித்து செபமாலை பக்தியை விதைத்தது கி.பி. 1251ல் புனித சைமன் ஸ்டாக்கிற்கு தோன்றி செபமாலை மற்றும் உத்தரியத்தின் மகிமையை போதித்தது.

கி.பி. 1517 ஆம் ஆண்டு துருக்கியருக்கு எதிரான லெப்பன்டோ கடற்போரில் கிறிஸ்தவர்களை வெற்றிக்கு இட்டுச் சென்றது அன்னையளித்த செபமாலை இதனால் தான் திருத்தத்தை 5 ஆம் பத்திநாதர் இதை முன்னிட்டு **"வெற்றியின் அன்னை"** என்ற விழாவை திருச்சபை கொண்டாட வேண்டும் என்று ஆணையிட்டார்.